விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 361 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 29 சனிக்கிழமை (14.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம்



15

## யாழில் பரவி வரும் எலிக் காய்ச்சலால்
# இதுவரை 58 பேர் பாதிப்பு

### சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவி வரும் எலிக் காய்ச்சல் நோயினால் இது வரை 58 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர் என யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஆ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே இதனைத் 15

## 'கலாநிதி' பட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சையையடுத்து
# பதவி விலகினார் சபாநாயகர்!



(கொழும்பு)

சபாநாயகர் பதவியிலிருந்து விலகியுள்ளதாக அசோக ரன்வல அறிவித்துள்ளார்.

தமது கல்வித் தகைமைகளை உறுதிப்படுத் தும் வரையில் சபாநாயகர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அவர் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுவாகல் பாலத்தினை புனரமைக்க நடவடிக்கை

### அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தினைப் புனர மைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திர சேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித் 15

### ஒரு வித மர்மக் காய்ச்சல்
## கடந்த ஒரு வாரத்தில் 6 பேர் உயிரிழப்பு

### யாழ்.போதனா பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வாரத்தில் யாழ்.போதனா வைத்திய சாலையில் எலிக்காய்ச்சல் மற்றும் ஒரு விதமான மர்மக் காய்ச்சலினால் 6 பேர் உயிரிழந் துள்ளனர் என யாழ்.போதனா வைத்திய 15

## கிளிநொச்சியில் கசிப்புடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந் தேக நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 27 லீற்றர் கசிப்பும் 120 15

## யாழ்.ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனா எம்.பியினால் அமைதியின்மை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைதி யின்மை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற முதலாவது ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தி லேயே இந்த அமைதியின்மை ஏற்பட்டது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப் பினர் இராமநாதன் அர்ச் சுனா அந்தக் கலந்துரையாட லில் அதிகாரிகளை விமர்சித் துள்ளார்.

இதன்போது அவரை வெளி யேற்றுமாறு அதிகாரிகள் தெரி வித்த நிலையில் அங்கு அமைதி 15

## புதிய சபாநாயகரை தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

புதிய சபாநாயகரைத் தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் பதவி விலகல் ஜனாதி 04

## பயங்கரவாத சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும்

### நீதி அமைச்சர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட் டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கான பணிகளை ஆரம் பித்துவிட்டோம் என நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர் ஷண நாணயக்கார தெரிவித் துள்ளார்.

அதேபோன்று, பாராளுமன்றத்தில் 15

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது

### யாழ்.ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு அபிவிருத் திக்கு அதிக நிதி ஒதுக்கப் படவுள்ளதாக அமைச்சர் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

அதிக வாசகர்கள்
அதிக விற்பனை

உங்கள் வலம்புரி

25 ஆண்டு நிறைவில்

வெள்ளி விழாக் காண்கிறது

**இடம் :** துர்க்கா மணி மண்டபம்

**காலம் :** 20.12.2024 (வெள்ளிக்கிழமை)
பிற்பகல் 3 மணி

வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி அழைக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்



## மணமகள் தேவை
**[சூரியன் / செவ்வாய்]**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த தொழிலதிபராகப் பணி புரியும் மணமகனுக்கும் 1994, சதயம் நட்சத்திரம், Finland Citizen உள்ள மணமகனுக்கும் மணமகள் தேவை.

**077 990 6328**
**077 600 7775**

(2758)



## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 12 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்**
**1 பரப்பின் விலை 18 இலட்சம் ரூபாய் [ 18 00 000/= ]**

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான
- காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

**076 069 1105, 077 288 0152**

(2757)


## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம்

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 63 வது வருடாந்த பொதுக்கூட்டம் 15.12.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாதியர் பயிற்சிக் கல்லூரி யாழ். போதனா வைத்தியசாலையில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனையும், சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

ப.பத்மநிருபன்
செயலாளர்

(2746)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## வரைபு வரவு செலவுத் திட்டம் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாகவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் வட்டார ரீதியாக நடாத்தப்பட்ட பொது மக்கள் கலந்துரையாடல்களின் அடிப்படையில் பொது மக்களின் முன்மொழிவுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வரைபினை புத்தூரில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும் மற்றும் அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களிலும், உப அலுவலக பொது நூலகங்களிலும் 2024.12.14 இருந்து 2024.12.21 ஆம் திகதி வரை அலுவலக நேரத்திலும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் இணையத்தளம் மற்றும் முகப்புப் புத்தகத்திலும் பொது மக்கள் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருவதுடன் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தங்களது ஆலோசனைகளையும் கருத்துக்களினையும் பின்வரும் ஏதேனும் வழிமுறை ஒன்றின் ஊடாக தெரிவிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| தபால் முகவரி | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர். |
| இணையத்தளம் | : https://valikamameast.ps.gov.lk/ |
| முகப்பு புத்தகம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை |
| ஈ.மெயில் | : secveps@yahoo.com |
| தொலைபேசி | : 021 205 8886 |

செயலாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

14.12.2024

(C-1793)

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 . 10 . 1968
விண்ணில் 22 . 11 . 2018

### திருமதி கோணேஸ்வரன் சுநீதி

ஆண்டுகள் ஆறாயினும் யாராலும்
ஆறுதல் அளித்திட முடியாத
பிரிவு அல்லவா தாய் என்ற
அந்த உன்னதமான உறவு
ஓய்ந்து விட்ட ஓவியமே!
கரைந்து விட்ட காவியமே!
வளர முடியாத வளர்பிறையே – நீ
வர முடியாதா மறுமுறையே!

வட்டாரம்

கணவர்,
பிள்ளைகள்

(C-1792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உதயங்க, கபிலவுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

## சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் நம்பிக்கை

(கொழும்பு)

**அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட தடையை அடுத்து உதயங்கவீரதுங்க மற்றும் கபிலசந்திரசேன ஆகியோருக்கு எதிராக இலங்கையின் புதிய அர சாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.**

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் ஊழல் மோசடிகள் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக அமெரிக்கா கடந்த திங்கட்கிழமை தடைகளை விதித்துள்ளது.





அந்தத் தடை பட்டியலில் ராஜபக்ஷ அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த உதயங்க வீரதுங்க மற்றும் கபில சந்திரசேன ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

ஏற்கனவே இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மீறல் குற்றங்களிலும் ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராக நுழைவு அனுமதித் தடை உள்ளடங்கலாகப் பல்வேறு தடைகளை விதிக்குமாறு வலியுறுத்தி அதனுடன் தொடர்புடைய 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும் ஆவணங்களையும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அனுப்பிவைத்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஊழல் குற்றங்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் இருவருக்கு எதிராக அமெரிக்க அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம், "ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைக்குக் காரணமாகவும் மிக் விமானக் கொள்வனவில் மிகமுக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராகவும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் முன் னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியான கபில சந்திரசேனவுக்கு எதிராகவும் அமெரிக்கா தடைகளை விதித் திருக்கிறது" எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி உதயங்க வீரதுங்க மற்றும் கபில சந்திரசேன ஆகியோருக்கு எதிராகவும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் உதயங்க வீரதுங்கவுடன் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் ஏ.வி.எம். ஜயநாத் குமாரசிறி என்பவருக்கு எதிராகவும் இலங்கையின் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என நம்புவதாகவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (நி-8)


FIAT LUX

# மணிவிழாக்காணும் ஆசான்



திரு. தம்பையா கலைச்செல்வன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை)

(சேவைக்காலம்- 1994-2024)

கலைச்செல்வன் என்பதோர் கலங்கரை விளக்கு
காண்பவர் உள்ளத்தை ஈர்ந்திடும் நற்காந்தம் - நீர்
எல்லோரும் நூலேந்த திசைகாட்டினீர்
நல்லோராய் வல்லோராய் எமையாக்கினீர்.

நிமிர்ந்த நடையோடு நேர்கொண்ட பார்வை
திமிர்ந்த ஞானத்தின் வெளிக்காட்டும் பேச்சு
முதிர்ந்த அறிவால் விரிந்த வெண்நுதல் - இவை
குதிர்ந்து நின்றவரே நூறாண்டு வாழ்க.

Best Wishes

ஆற்றல் மிக்கானென்று அறிவுலகம் போற்றும்
போற்றுதற்குரியான் என்று எமை ஈன்றவர் உமை புகழ்வார்
சாற்றறிய சான்று பல பெற்ற கலைச்செல்வன்
மாற்றமின்றி இன்று போல் என்றும் நூறாண்டு வாழ்க.

கல்லூரி நிமிர்ந்து நிற்க நீர் முனைந்து நின்றீர்
வல்லவனாய் இனி தொடர்ந்தும் எமை வழிநடத்திச் செல்வீர்
சொல்லாண்ட மாட்சிமைசேர் கலைச்செல்வா -நீர்
பல்லாண்டு நலம் வாழ நாம் வாழ்த்துவோம்.

ஆசானின் பிறந்த தினத்தினை வாழ்த்துவதோடு அவரது சேவையைப் பாராட்டி இன்று நடைபெறும் பணி எழில் விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

(சீ-1791)

என்றும் அன்புடன், 99 A/L மாணவர்கள், யா/ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# 11 ரன் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி




முதல் "ரி-20" போட்டியில் தென்னாபிரிக்க அணி 11 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டி கொண்ட "ரி-20" தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி டர்பனில் நடந்தது. "டாஸ்" வென்ற தென்னாபிரிக்கா பட்டிங் தேர்வு செய்தது.

தென்னாபிரிக்க அணிக்கு துவக்கத்தில் ஹென்ரிக்ஸ் (8), துசென் (0), பிரீஸ்கே (8) ஏமாற்றினர். கேப்டன் கிளாசன் (12), டொனோவன் (7) நிலைக்கவில்லை. பின் டேவிட் மில்லர், ஜார்ஜ் லிண்டே ஜோடி சேர்ந்து அணிக்கு கைகொடுத்தனர். அரை சதம் அடித்த மில்லர், 40 பந்தில் 80 ரன் விளாசினார்.

லிண்டே 24 பந்தில் 48 ரன் எடுத்தார். தென்னாபிரிக்க அணி 20 ஓவரில் 183/9 ரன் எடுத்தது. பாகிஸ்தானின் ஷகீன் அப்ரிதி, அப்ரார் அகமது தலா 3 விக்கெட் சாய்த்தனர்.

பின் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு கப்டன் ரிஸ்வான் (62), சைம் அயுப் (31) கைகொடுத்தனர். தயாப் தாஹிர் 18 ரன் எடுத்தார். மற்றவர்கள் ஒற்றை இலக்க ரன்னை தாண்ட வில்லை. 20 ஓவரில் 172/8 ரன் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவின் லிண்டே அதிகபட்சம் 4 விக்கெட் சாய்த்து, ஆட்ட நாயகன் ஆனார். தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என முன்னிலை பெற்றது. (6-8)

# பங்களாதேஷ் தொடரை வென்ற மேற்கிந்திய தீவுகள்

## அமிர் கன்னிச் சதம்



பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை முழுவதுமாக வென்று மேற்கிந்திய தீவுகள் சாதனை படைத்தது.

மேற்கிந்திய தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி செயின்ட் கிட்ஸில் நடந்தது.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

எனினும் சவுமியா சர்க்கார் 73 ஓட்டங்களும், மெஹிதி 77 ஓட்டங்களும் விளாச அணியின் ஸ்கோர் உயர்ந்தது. அதன் பின்னர் கைகோர்த்த மஹ்முதுல்லா, ஜாகிர் அலி கூட்டணி அதிரடியில் மிரட்டியது.

இதன்மூலம் பங்களாதேஷ் 5 விக்கெட்டுக்கு 321 ஓட்டங்கள் குவித்தது. மஹ்முதுல்லா 63 பந்துகளில் 4 சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 84 ஓட்டங்கள் விளாசினார். ஜாகிர் அலி 57 பந்துகளில் 2 சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 62 ஓட்டங்கள் குவித்தார்.

அடுத்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது.

அதன் பின்னர் வந்த அமிர் ஜான்கோ ருத்ர தாண்டவம் ஆடினார். சிக்ஸர்களை பறக்கவிட்ட அவர் 80 பந்துகளில் சதம் அடித்து மிரட்டினார். அவருக்கு பக்கபலமாக மோட்டி 31 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுக்க, மேற்கிந்திய தீவுகள் 45.5 ஓவர்களிலேயே 326 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது.

அமிர் ஜான்கோ 83 பந்துகளில் 4 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

மேலும், அறிமுக ஒருநாள் போட்டியில் குறைந்த பந்தில் (80) சதம் விளாசிய வீரர் எனும் இமாலய சாதனையை படைத்தார். (6-8)

## வடக்கு....

சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நேற்றுக் காலை 09.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதி அரசாங்க அதிபரும் ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். மேலும், வரவேற்புரையில் அமைச்சர், ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இவ் ஆண்டு மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தித் திட் டங்களுக்காக 1303.42 மில்லியன் ரூபா இற்றை வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையுரையாற்றுகையில்,

பல இன்னல்களைச் சந்தித்த யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியில் அரசியல்வாதிகள் மட்டுமின்றி அரசாங்க உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் அவசியம் எனவும், எமது அரசாங்கமானது இலங்கை மக்கள் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு செயலாற்றும் என்றும், மக்களின் குறைகளை நிவர்த்தி செய்து மக்களின் முன்னேற்றத்திற்கு ஒன்றிணைந்து வினைத்திறனாகச் செயலாற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன், எமது அரசாங்கமானது கிராமங்களை நோக்கிய பாய்ச்சலுக்கான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வுள்ளதாகவும், வட கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு கூடிய நிதியினை அரசாங்கம் ஒதுக்கீடு மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்து, அனைவரும் கட்சிபேதங்களின்றி மாவட்ட அபிவிருத்திக்கு ஒத்துழைப்பினை நல்குமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரையில் 302.82 மில்லியன் ரூபாவும், பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தில் 87.09 மில்லியன் ரூபாவும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் 538.95 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதி அரசாங்க அதிபரால் குறிப்பிடப்பட்டது.

மேலும், மீள்குடியேற்றம், சுகாதாரம், விவசாயம், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதியைப் பெறவேண்டிய திட்ட முன்மொழிவுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம், கருணாநாதன் இளங்குமரன், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா, மருத்துவர் சண்முகநாதன் ஸ்ரீ பவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் கடற்படைத் தளபதியின் பிரதிநிதிகள், திணைக்களத்தலைவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கமநல சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ம-7,33)

## தெரிவு ....

பதியால் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், அது அரசியலமைப்பு ரீதியாக செல்லுபடியாகிறது.

இதனையடுத்து, புதிய சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான களம் அங்கு உருவாக்கப்படுவதாக பாராளுமன்றத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

நிலையமைப்புக் கட்டளை 6 - 1இன் படி, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு பதவி விலகல் குறித்து அறிவிக்கப்பட்ட ஏனைய புதிய சபாநாயகர் நியமனம் பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வில் நடைபெறும் என்று துணைப் பொதுச் செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் பதவியில் வெற்றிடம் ஏற்படும் போதெல்லாம், அடுத்து வரும் முதல் கூட்டத்திலேயே பாராளுமன்றம் புதிய சபாநாயகரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் கூறுகின்றன.

இந்தநிலையில், சபாநாயகர் அசோக ரன்வெல பதவி விலகியதை அடுத்து, 2024 டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் பாராளுமன்றம் கூட உள்ளது, அங்கு புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்படவுள்ளார். (ம-7)

## பதவி ....

தாம் கலாநிதிப் பட்டம் பெற்ற ஜப்பான் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் குறித்த ஆவணங்களைப் பெறுவதில் தற்போது சிரமங்கள் இருப்பதாகவும் அவற்றைப் பெற்று விரைவில் வெளிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தமது பட்டம் தொடர்பில் எழுந்துள்ள குழப்ப நிலையை கருத்திற்கொண்டும் அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கும் நோக்கிலும் தாம் சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதாக அசோக ரன்வெல அறிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி அவர் சபாநாயகராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடிய அபாயம் உருவாகியுள்ளது என எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட எரிபொருள் கப்பல் ஒன்று எரிபொருட்களை இறக்காமலேயே திரும்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருளை இறக்குமதி செய்த குறித்த நிறுவனத்திற்கு சொந்தமான 70 எரிபொருள் நிலையங்களுக்கும் அரசாங்கம் தலையீடு செய்து எரிபொருள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படாவிட்டால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக எரிபொருள் விநியோக சங்கத்தின் செயலாளர் கபில நாபுடுன்ன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் அவுஸ்திரேலிய நிறுவனமொன்றுக்கு 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவதாக உறுதியளித்த போதிலும் 70 நிறுவனங்கள் மட்டுமே வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கப்பல் திரும்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் கப்பல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட காரணத்தினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது. உரிய முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ளாத நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டாம் என தமது சங்கம் விநியோகஸ்தர்களை கேட்டுக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விடயம் பற்றி தெரிந்து கொள்ளாது சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சவுதி அரேபியா மற்றும் குவைத் போன்ற நாடுகளிலிருந்து இரண்டு மாத கால கடன் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் இருந்த போதிலும் கடந்த அரசாங்கங்கள் அந்த வாய்ப்பை பயன்படுத்தவில்லை என கபில மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# போதியளவு எரிபொருள் கையிருப்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையில் பயன்படுத்தக் கூடிய எரிபொருட்கள் கையிருப்பில் உள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜ கருணா தெரிவித்துள்ளார். அண்மையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட எரிபொருள் கப்பல் ஒன்று திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட எரிபொருள் கப்பல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு சொந்தமான யுனைட் பெற்றோலியம் நிறுவனத்தினால் கடந்த 2ஆம் திகதி தருவிக்கப்பட்ட எரிபொருள் கப்பல் இவ்வாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் தலா 15000 மெற்றிக்தொன் எடையுடைய பெற்றோல் மற்றும் டீசல் கொண்டு வரப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் உள்ளகப் பிரச்சினை காரணமாக எரிபொருள் கப்பல் தரையிறக்கப்படாது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக ஜனக ராஜ கருணா தெரிவித்துள்ளார். (நி-8)

# கருகம்பனையில் இரத்ததான முகாம்


(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் இணைந்து 25 ஆவது வருடமாக நடத்தும் இரத்ததான முகாம் நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை கருகம்பனை நூலகத்தில் நடைபெறவுள்ள இரத்ததான முகாமில் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1952 - 09 - 21



இறப்பு 2024 - 12 - 12

## அமரர். முத்துத்தம்பி யோகரட்ணம்(வவா)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி யோகரட்ணம் (வவா) அவர்கள் 12.12.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் அன்னலட்சுமி(ஜேர்மனி), குணமணி(மட்டுவில் தெற்கு) ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவயோகம், யோகராசா, யோகராணி(மட்டுவில் தெற்கு), யோகீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பகீரதி(லண்டன்), வாசுகி(நெதர்லாந்து), றஜீவன் (ஜேர்மனி), சதீஸ்குமார்(பிரான்ஸ்), துஷாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதன்(லண்டன்), பார்த்தீபன்(நெதர்லாந்து), சுஜித்தா (ஜேர்மனி), சௌமிகா(பிரான்ஸ்), சௌசிகா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சௌமியா, றொசானா, டிசான்(லண்டன்), அனுஜன், அனுசா, சுகி (நெதர்லாந்து), றஸ்வன்,ஹர்வின்(ஜேர்மனி), அஹானா, அஸ்னா(பிரான்ஸ்), கிலான்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

தகவல்- குடும்பத்தினர்
077 667 5176

(சி-1789)

# இராசிபலன்

14.12.2024
கார்த்திகை 29, சனிக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.53மணிவரை
ரோகினி பின்னிரவு 4.30மணிவரை


சுபநேரம் 3.21-4.51 மணிவரை
இராகுகாலம் 9.21-10.51 மணிவரை
விஷ்ணுவாலய தீபம், வீடுகளில் தீபம்

அமிர்த்த சித்தம்
சந்திராஷ்டமம் - சித்திரை

வளவன்




வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.





திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பிற இனத்தவரால் பெருமைகள் சேரலாம்.




புதிய நட்புகள் இடம்பெறலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.




அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.





வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு.




நண்பர்களுடன் நிலவிய குழப்பங்கள் அகலும், பாக்கிகள் வசூலாகலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.




துயரங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினருடன் கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், காரிய தாமதமுண்டு.





அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




இனத்தால் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு




மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




பொது நல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சந்திப்புக்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்க்கு கால்கள் கிடையாது ஆனால் இறக்கைகள் உண்டு.

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்.நகர் 1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். (6-8)

| திகதி | நேரம் | தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 18.12.2024 | மு.ப.09.00 - மு.ப.11.00 | முத்தமிழ் வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | மீனாட்சி அம்மன் கோவிலடி |
| | பி.ப.02.30 - பி.ப.04.00 | நமசிவாயம் பாடசாலை முன்பாக |
| 19.12.2024 | மு.ப.09.00 - மு.ப.11.00 | கூழாவடி வைரவர் கோவிலடி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | சிறாம்பியடி சனசமூக நிலையம் |
| | பி.ப.02.30 - பி.ப.04.00 | பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கை |
| 20.12.2024 | மு.ப.09.00 - மு.ப.11.00 | யாழ்.வீதி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | பெருமாள் கோவிலடி |
| | பி.ப.02.30 - பி.ப.04.00 | கன்னாதிட்டி காளி கோவிலடி |
| 23.12.2024 | மு.ப.09.00 - மு.ப.11.00 | சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலை |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | கீரிப்பிள்ளையார் கோவிலடி |
| | பி.ப.02.30 - பி.ப.04.00 | மாவடி வீதி |
| 24.12.2024 | மு.ப.09.00 - மு.ப.11.00 | பிரப்பங்குளம் வீதி |
| | மு.ப.11.00 - பி.ப.01.00 | B.A.தம்பி லேன் |
| | பி.ப.02.30 - பி.ப.04.00 | கில்னர் வீதி |

# கசூரினாவில் கைதான இருவர் தடுப்புக் காவலில்

(யாழ்ப்பாணம்)

யாழில் கஞ்சா போதைப் பொருளுடன் கைதான இருவரையும் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஷாலினி ஜெயபாலச்சந்திரன் அனுமதித்துள்ளார்.

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மித்த பகுதியில், நேற்று முன்தினம் காலை எரிபொருள் முடிவடைந்த நிலையில் படகொன்று கரையொதுங்கி இருந்தது.

இதனையடுத்து படகினை புலனாய்வாளர்கள் சோதனையிட்ட போது, 92 பொதிகளில் 213.899 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் படகில் வந்த இருவரையும் கைது செய்து, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந் நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தினர்.

அதன்போது, சந்தேகநபர்களிடம் தொடர் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால், அவர்களைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வேண்டும் என பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பதில் நீதவான் இருவரையும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.(6-8-33)

# வவு.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மத்தியஸ்த தினம்

(குருமன்காடு)

வவுனியாவில் மத்தியஸ்த தின நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

தேசிய மத்தியஸ்த தினமானது ஒவ்வொரு வருடமும் ஜூலை 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் மாவட்ட மட்டங்களில் இந்நிகழ்வு கடந்த காலங்களில் அனுஷ்டிக்கப்படவில்லை.

இந்நிலையில், மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இந்நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள், அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றி செயற்பாடுகள் தொடர்பிலும் அவை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்து ரைகளும் அனுபவப் பகிர்வுக ளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.கமலதாசன், உதவி மாவட்ட செயலாளர் எம்.சபர்ஜா, விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின் தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8-250)

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

# ஒருங்கிணைப்பு குழு தலைவராக கடமைகளைப் பொறுப்பேற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவராக ஜனாதி பதியினால் நியமிக்கப்பட்ட கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக உத்தியோகபூர்வமாகத் தமது கடமையினைப் பொறுப்பேற்றார்.



இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன், மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்களும் பங்குபற்றினார்கள். (நி-8-33)

# வன்முறைகளுக்கு எதிராக விழிப்புணர்வு பேரணி



(குருமன்காடு)

பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பழைய பேரூந்து நிலையத்தில் ஆரம்பித்த குறித்த பேரணியானது பசார் வீதியூடாக, வவுனியா வைத்திய சாலை சுற்றுவட்ட வீதியை அடைந்து பிரதான வீதி ஊடாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தை அடைந்து அங்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பும், பொஸ்டோ நிறுவனமும் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் 16 நாள் செயல்வாத நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு கட்டமாகவே குறித்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

இதன்போது விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் ஊர்வலத்தில் ஈடுபட்டனர். (6-8-250)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர். முனிரத்தினம் வழங்கவுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “தாம் பட்டப்படிப்பினை நிறைவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்ற போதிலும் அரச வேலை வாய்ப்பு தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் புதிய அரசாங்கம் தமக்கான அரச நியமனத்தை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் தட்டுப்பாட்டிற்கு அதிக வெப்பமே காரணம்

## பேராசிரியர் அருணகுமார விளக்கம்

**(கொழும்பு) நாட்டின் தற்போதைய தேங்காய் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம் ஆண்டின் முதல் சில மாதங்களில் நிலவிய மிகவும் வெப்பமான காலநிலையாகும் என ருஹுனு பல்கலைக்கழகத்தின் பயிர் விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர் அருணகுமார தெரிவித்துள்ளார்.**



அத்துடன் நாட்டில் வருடாந்தம் பயிரிடப்படும் தென்னை மரக்கன்றுகளின் எண்ணிக்கை சுமார் 70 இலட்சம் வரை குறைந்துள்ளமையும் இதற்கான காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறுகிய காலத்திற்குள் தேங்காய் தட்டுப்பாடு ஏற்படுவதென்றால் குரங்குகளுகளின் எண்ணிக்கையில் உடனடி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அப்படியொரு உடனடி அதிகரிப்பு இல்லை என்பது தெளிவாகிறது.

மேலும் மார்ச் முதல் ஜூன் வரை, நாட்டில் அதிக வெப்ப நிலை உயர்வால் தேங்காய் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தென்னை மரத்திற்கு உகந்த வெப்ப நிலை 27-28 சென்டிகிரேட் வெப்பநிலையாகும். ஆனால் 33 சென்டிகிரேடுக்கு மேல் செல்லும் போது, தென்னை மரங்களின் மகரந்தச் சேர்க்கை குறைந்து, காய்க்கும் தன்மை குறைகிறது என பேராசிரியர் அருணகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை உலகிலேயே அதிக தேங்காய் பாவனையைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்வது குறிப்பிடத்தக்கது. (நி-8)




**யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)**

**அறிவித்தல்**

**வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.அ.டெனிஸ் அவர்கள் தலைமையில் 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு யாழ்.நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறும். எனவே தாங்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

**நிகழ்ச்சிகள்:-**

1. இறைவணக்கம்.
2. தலைமையுரை
3. செயலாளர் அறிக்கை, ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்.
4. பொருளாளர் வரவு-செலவு அறிக்கை சமர்ப்பித்தல் - (2024)
5. விஷேட பிரதிநிதிகள் உரை.
6. அங்கத்தவர் கருத்துரை.
7. நிர்வாக குலைவு.
8. புதிய நிர்வாகத் தெரிவு.
9. எதிர்கால செயற்பாடு தொடர்பில் தீர்மானித்தல்.

நன்றி

(C-1788)

**நிர்வாகம், யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)**



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின்**

**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் ஆரம்பம்**

| | |
|---|---|
| சக்கரை நோய் - DIABETES | இடுப்பு வலி - BACK PAIN |
| மன உளைச்சல் - TENSION | சைனஸ் - SINUS |
| இரத்த அழுத்தம் - BLOODPRESSURE | இருதய நோய்கள்- HEART DISEASE |
| ஆஸ்துமா - ASTHMA | குழந்தை பேறின்மை - INFERTILITY |
| மூட்டு வலி - JOINT PAIN | மாணவர் கை நடுக்கம்- SHIVERING |

தொடர்ந்து பயிற்சிகள் செய்து வர இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை நம் வசமாகும்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எளிய முறை யோகா பயிற்சிகளை பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

**அன்பர்களே பங்கேற்று பலனடைவீர்...**

**இடம்** :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில்

**காலம்** :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை(14.12.2024-20.12.2024)

**நேரம்** :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

**பயிற்சிகளை வழங்குபவர்**- மனவளக்கலை பேராசிரியர் K.R.முனிரத்தினம் அவர்கள்

**வாழ்க வளமுடன்** (சி-1719)

**தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில், இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில், யாழ்ப்பாணம். தொ.இல :- 021 222 2772, 077 736 8745, 076 857 1395, 077 891 6407**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 32<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: A/L,Shop(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14998 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 49<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:BBA, Accounting Associate(pvt)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம், பட்டதாரி<br>தொ.இ: G/14948 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம் :5' 7" 12 இல் சூரி செவ்<br>தகைமை/தொழில்: Degree,Nursing Staff<br>எதிர்பார்ப்பு- அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15000 | பிறப்பு-2003-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:ஆசிரியர்(pvt)<br>எதிர்பார்ப்பு- வெளிநாடு<br>தொ.இ: G/14951 |
| பிறப்பு: 1988-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கிபா-53<br>உயரம்:5' 7"<br>கி.பா-27<br>தகைமை/தொழில்: HNDE,Own Business<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/14927 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கிபா-14 ½ 5 இல் சூரி செவ்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: Bsc, Computer Engineer(Canada)<br>எதிர்பார்ப்பு-வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/14952 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரீல்ஸ் மோகத்தால்

# ரயிலில் இருந்து விழுந்த சீனப் பெண்



(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

சமீப காலங்களில் ஆபத்தான முறையில் ரீல்ஸ் வீடியோ எடுக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது.

சீனப் பெண் ஒருவர் ரயிலில் ரீல்ஸ் வீடியோ எடுக்கும்போது கீழே தவறி விழுந்த அதிர்ச்சி வீடியோ இணையத்தில் வைரலானது.

சீனாவை சேர்ந்த பெண் ஒருவர் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார். அப்போது ரயிலில் பயணிக்கும்போது அப்பெண் ரயிலுக்கு வெளியே தலையை நீட்டி ஆபத்தான முறையில் ரீல்ஸ் எடுத்துள்ளார்.

அந்த சமயத்தில் ஒரு மரத்தில் மோதி அப்பெண் கீழே விழுந்துள்ளார்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக அப்பெண் ஒரு புதருக்குள் விழுந்ததால் காயமின்றி உயிர் தப்பினார்.

சமீப காலங்களில் ஆபத்தான முறையில் ரீல்ஸ் வீடியோ எடுக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக பலரும் உயிரிழந்து வருகின்றனர்.

(நி-8)

# அமெரிக்காவிற்கா...

# உடனடியாக நி...

## எச்சரிக்கை வி...

(வோஷிங்டன்)

**தமது நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்படுமானால் அமெரிக்காவிற்கு வழங்கப்படும் மின்சாரத்தை உடனடியாக நிறுத்திவிடுவோம் என கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தான் பதவியேற்றவுடன் கையெழுத்திடும் முதல் ஆவணங்களில் ஒன்று, கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது தொடர்பானது தான் என்று தெரிவித்திருந்த நிலையிலேயே கனடாவின் இந்த எச்சரிக்கை வெளிவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் 1.5 மில்லியன் வீடுகளுக்கு கனடா மின்சாரம் வழங்கியுள்ளது. அத்துடன், மிச்சிகன், மின்னசோட்டா மற்றும் நியூயோர்க்குக்கு மின்சாரம் ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடு கனடா ஆகும்.

அண்மையில் அமெரிக்க அதிகாரிகளை சந்திப்பதற்காக வோஷிங்டன் டிசிக்கு சென்றிருந்த ஒன்ராறியோ பொருளாதார மேம்பாட்டுத்துறை அமைச்சர் அமெரிக்கா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயில் 60 சதவிகிதம் கனடா விலிருந்து தான் வருகிறது.

ஆக, நீங்கள் இறக்குமதி செய்...

# வீதியில் சென்ற கார்கள் மீது மோதி இரண்டாக முறிந்த விமானம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் விமானம் ஒன்று வீதியில் சென்ற கார்கள் மீது மோதி இரண்டாக முறிந்த பயங்கர விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த புதன்கிழமை அன்று தெற்கு டெக்சாஸின் விக்டோரியாவில் உள்ள ஸ்டேட் ஹைவே லூப் வீதியில் இரட்டை எஞ்சின் ப்ரொப்பல்லர் விமானம் ஒன்று கார்கள் மீது மோதியது.

வீதிக்கு மேல் தாழ்வாகப் பறந்துகொண்டிருந்த விமானம் திடீரென வீதியில் செல்லும் 3 கார்கள் மீது மோதி கீழே விழுந்து இரண்டாக முறிந்தது.

இந்த விபத்தில் 4 பேர் படுகாயம் அடைந்தனர்.



ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்துக்குள்ளான விமானம் இரட்டை எஞ்சின் பைபர் பிஏ -31 ரகத்தை சேர்ந்தது.

விபத்து நடந்தபோது விமானி மட்டுமே விமானத்தில் இருந்துள்ளார். விபத்தில் அவர் உயிர் தப்பிய நிலையில் அவரிடம் விசாரணை நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் விபத்து தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

(நி-8)

# கனடாவில் அதிக... கருணைக் கொலை...

(ஒட்டாவா)

கனேடிய அரசாங்கத்தின் புதிய தரவுகளின் படி, கருணைக் கொலை அல்லது மருத்துவ உதவியினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையானது கனடாவில் அதிகரித்து வருகின்றது.

கனடாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு இது சட்டமாக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 15,300 பேர் இறப்பதில் மருத்துவ உதவி பெற்றதாகக் காட்டும் தரவுகளைக் கடந்த புதன்கிழமை கனடாவின் சுகாதாரப் பிரிவு வெளியிட்டது.




இது கனடாவில் கடந்த ஆண்டு பதிவான மொத்த இறப்புகளில் 4.7 சதவீதத்தை குறிக்கின்றது.

இவர்களில் பெரும்பாலானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கான மின்சாரத்தை ...நிறுத்துவோம்!

## ...விடுத்த கனடா



...யும் 60 சதவிகித எண்ணெய்க்கும் 25 சதவிகித வரி விதித்தால், உங்கள் பெற்றோல் விலை எங்கேயோ போய்விடும் என்று தெரிவித்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (நி-8)

# உலகின் சிறந்த நபராக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு



(வோஷிங்டன்)

இந்த ஆண்டின் உலகின் சிறந்த நபராக ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என டைம்ஸ் சஞ்சிகை அறிவித்துள்ளது.

இரண்டாவது தடவையாக டைம்ஸ் சஞ்சிகை ட்ரம்பிற்கு இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதற்கு முன்னதாக 2016 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த நபராக ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.


வரலாற்று ரீதியான அரசியல் மீள் பிரவேசம் மற்றும் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவானமை போன்ற விடயங்கள் ட்ரம்பின் ஆளுமையை வெளிப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1927 ஆம் ஆண்டு முதல் இந்த விசேட அங்கீகாரத்தை டைம்ஸ் சஞ்சிகை வெளியிட்டு வருகின்றது.

உலகின் அந்த ஆண்டில் சாதகமான அல்லது பாதகமான வழியில் மிகவும் பாரிய தாக்கத்தை செலுத்திய நபரை, ஆண்டின் சிறந்த நபராக டைம்ஸ் சஞ்சிகை அங்கீகரித்து வருகின்றது.

சுற்றாடல் ஆர்வலர் கிரேட்ட தொர்ன்பர்க், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பரக் ஒபாமா, மெட்டாவின் தலைமை நிர்வாகி மார்க் சர்க்கர்பர்க், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி மற்றும் பாப் பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ் போன்றவர்கள் கடந்த காலங்களில் இந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ...கரிக்கும் ...லைகள்



...கள் சராசரியாக 77 வயதுக்கும் அதிகமானவர்கள்.

அவர்களில் சுமார் 96 சதவீதமானோர் புற்றுநோய் போன்ற கடுமையான மருத்துவ நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

கனேடிய சட்டமியற்றுபவர்கள் தற்போது 2027 ஆம் ஆண்டுக்குள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் கருணைக் கொலைக்கான அணுகலை விரிவுபடுத்த முயல்கின்றனர்.

கடந்த தசாப்தத்தில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஸ்பெய்ன் ஆகிய நாடுகளுடன் கருணைக் கொலையை சட்டமாக்கிய நாடுகளில் கனடாவும் ஒன்றாகும்.

ஹெல்த் கனடாவால் புதன்கிழமை வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்கள், 2023 இல் கனடாவில் கருணைக் கொலையில் இறப்பவர்களின் விகிதம் கிட்டத்தட்ட 16% அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. (நி-8)

# காசாவில் உணவின்றித் தவிக்கும் மக்கள்



(ஜெருசலேம்)

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள காசா மக்கள் உணவின்றித் தவித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நாடுகள் அளித்த உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்ட லொறிகளை காசாவுக்குள் செல்ல இஸ்ரேல் பாதுகாப்புப்படை அனுமதி மறுத்துள்ளது.

இதனால் சர்வதேச அமைப்புகள் உணவுப் பொருள் விநியோகிப்பதை நிறுத்தி விட்டதால் பாலஸ்தீன மக்களின் முக்கிய உணவு ஆதார மான சப்பாத்தி மாவுக்கு காசா முழுவதும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வீடுகளில் மாவு இருப்பு கரைந்து விட்டதால் சப்பாத்தி விற்பனை செய்யும் கடைகளை ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கானோர் முற்றுகையிடுகின்றனர்.

இதனால் கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உயிரிழப்பதும் காசாவில் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் பசியுடன் கால் கடுக்க வரிசையில் காத்திருந்த பலர் வெறும் கையுடன் வீடு திரும்பும் அவலமும் காசாவில் அரங்கேறி வருகிறது.

மாவு தட்டுப்பாட்டு எதிரொலியாக காசாவில் உணவு பண்டங்களின் விலை பன் மடங்கு உயர்ந்துள்ள நிலையில் செய்வதறியாமல் புலம்பெயர்ந்த பாலஸ்தீன மக்கள் பெரும் தவிப்பிற்கு ஆளாகியுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நம்பிக்கையை சிறிதளவும் சிதைக்க மாட்டோம்

## ஜனாதிபதி அநுர உறுதி



(கொழும்பு)

எமது அரசாங்கத்தில் எந்தப் பொறுப்பை வகிப்பவராயினும் தவறு செய்திருந்தால் நாம் நடவடிக்கை எடுப்போம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

அரச ஊடக பிரதானிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித் தார்.

ஏழு தசாப்தங்களுக்கும் அதிக மாக இந்நாட்டு மக்கள் பல்வேறு அரசாங்கங்களை தெரிவு செய்தனர். பல அரசாங்கங்களை கவிழ்த்துள் ளனர்.

வரலாற்றில் முதல் முறையாக இம்முறை நாட்டு மக்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய வரலாற்று மக்கள் ஆணையின் அர்த்தம் மற்றும் நோக்கம் என்னவென்பது தொடர்பிலான ஆழமான சிந்தனை எமக்கு உள்ளது.

அத்துடன் தரமான மற்றும் நிலையான நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை தேர்ந்தெடுத்தனர் என்றும் அந்த சிறப்பான நம்பிக்கை கடுகளவிலும் சிதைந்து போவதற்கு எமது அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

மேலும் நாட்டுக்குள் தவறு செய்கின்ற எவரையும் எந்த காரணத்துக்காகவும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை. நாட்டுக்குள் மட்டுமன்றி எமது அரசாங்கத்தினுள் எந்தத் தரத்தில் இருப்பவராயினும் தவறு செய்தால் அதற்கு எதிரான நடவடிக்கையை எடுப்பதற்கு நாம் தயங்கப்போவதில்லை. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய சரியான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்வதற்கும் நாம் இரு முறை சிந்திக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 500 | 500 | 700 | 500 |
| உருளைக்கிழங்கு | 240 | 300 | 250 | 240 | 300 |
| பச்சைமிளகாய் | 1200 | 1000 | 1000 | 1000-1300 | 1000 |
| தக்காளி | 350 | 350 | 300 | 200-250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 240 | 150-200 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 250 | 400 |
| கரட் | 200 | 260 | 250 | 250 | 300 |
| பூசணி | 140 | 150 | 200 | 150 | 200 |
| புடோல் | 300 | 350 | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80-100 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | -- | 400 |
| பாகற்காய் | 1200 | 2000 | 1000 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200-250 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 850 | 700 | 500 | 800-1000 | 600 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 200 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 600-700 | 800 |
| முருங்கைக்காய் | -- | 800 | 1000 | -- | 1200 |
| போஞ்சி | 650 | 550 | 500 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 350 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 150 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 400 | 500 | 350-550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 700 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 500 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 220 | 300 | 300 | 120 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 140 | 150 | -- | 100 |
| வல்லாரை | 80 | 40 | 100 | 100 | 100 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 80 | 200 |

## இன்று ஒரு தகவல் 283



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# முயற்சி தேவை

ஊருக்கு வெளியிலே அமைதியான ஒரு இடம். அங்கே ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு சாமியார். அவர் தினமும் நல்ல போதனைகள் செய்வார். பல பேர் போய் அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்து அவர் சொல்லுகின்ற அறிவுரைகளைக் கேட்டு விட்டு வருவது வழக்கம். ஒரு தடவை அவரைப் பார்த்துவிட்டு போவதற்காக மூன்று வெளியூர் தம்பதிகள் வந்திருந்தார்கள். அந்த மடத்திலேயே தங்கியிருந்து சாப்பிட்டு அவருடைய போதனைகளைக் கேட்டு விட்டுப் போக வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். காலையிலே குளித்துவிட்டு பூஜையிலே உட்கார்ந்தார் அந்த சுவாமி. இவர்களும் குளித்துவிட்டு அந்தப் பூஜையைப் பார்ப்பதற்காக அவர் முன்னால் வந்து இருந்தார்கள். பூஜை ஆரம்பமாகி சம்பிரதாயப்படி அது அதிக நேரம் நடந்து கொண்டு இருந்தது.

இவர்களுக்கு நல்ல பசி இருந்தாலும் இந்த நேரத்திலே அதை எப்படி வெளியே காட்டிக்கொள்வது பேசாமல் இருந்தார்கள். அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதற்கு பிறகு பேச ஆரம்பித்தார். அவருடைய பேச்சு நன்றாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இவர்களுக்கு இருக்கிற வயிற்றுப்பசி அதை சரியாக கவனிக்க விடவில்லை. அந்தச் சுவாமியோ இதை கவனித்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்கு மனதிற்குள்ளே ஒரு எண்ணம். உள்ளே சாப்பாடு தயாராகிக்கொண்டிருப்பது போல இருக்கிறது. இந்தப் பேச்சு முடிவடைந்ததும் எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போவார் என்று ஒரு நினைப்பு. ஆனால் சுவாமி இதைப்பற்றி எதுவுமே பேசவில்லை. கண்டு கொள்ளவும் இல்லை.

ஒரு அம்மாவாலே அதற்கு மேலே சும்மா இருக்க முடியவில்லை. சாப்பாட்டைக் கவனிக்கலாமா? என்று மெதுவாக ஆரம்பித்தார். ஆம் கவனிக்கலாமே என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார் சுவாமி. இவர்கள் மிகவும் அவரசமாக எழுந்து நின்று உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேசை மேலே ஒரு கிண்ணம் மூடியிருந்தது. அது தான் சாப்பாட்டு மேசை போல இருக்கிறது . இங்கே சாப்பாடு வந்திடும் என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி இருந்து கொண்டார்கள்.

சுவாமி அந்த கிண்ணத்தை எடுத்து அந்த அம்மாவிடம் கொடுத்தார். அவர் உடனே அதை வாங்கி மூடியைத் திறந்து பார்த்தார் உள்ளே ஒரு சாவி இருந்தது. சரி தான் இது சமையலறைச் சாவி போல இருக்கிறது. அங்கே போய் அதைத்திறந்து சாப்பாட்டை நாங்களே எடுத்துக் கொண்டு வந்து இங்கே வைத்துச் சாப்பிட வேண்டும் போல இருக்கிறது என்று நினைத் தார்கள். வாருங்கள் பூட்டிய அறையைக் காட்டுகிறேன் எனச்சுவாமி அவர்களை அழைத்துக் கொண்டு போய் காட்டினார். இவர்கள் அந்த அறையை மிகவும் ஆவலாக திறந்தார்கள் உள்ளே பார்த்தால் அங்கே அரிசி, பருப்பு, விதவிதமான காய்கறி எல்லாம் இருந்தது. சமையலுக்கு தேவையான மிளகாய், எண்ணெய், பால், தயிர், நெய் இப்படி எல்லாமே இருக்கிறது. அடுப்பு, விறகு, தீப்பெட்டி கூட அங்கே இருக்கிறது. சாப்பாடு தயாராக இருக்குமென்று நினைத்துக் கொண்டு போன இவர்களுக்கு இதையெல்லாம் பார்த்ததும் சோர்ந்து போய் விட்டார்கள்.

சுவாமி! என்ன இது? சாப்பாடு இல்லையா? என்றார்கள். அது தான் சாப்பாட்டுக்கு வேண்டிய எல்லாம் இங்கே இருக்கிறது. அடுப்பை மூட்டி நீங்கள் தான் உங்களுக்கு ருசிக்குத் தகுந்த மாதிரி சமைத்துக் கொள்ள வேண்டும். இந்த சந்நியாசிக்கு எப்படி சமைக்கத் தெரியும் என்று கேட்டார் சுவாமி. சாப்பாடு தயாராக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம் என்றார்கள் அவர்கள். நீங்கள் இப்படி சொல்லுவீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இதுவரைக்கும் நான் எவ்வளவோ தத்துவமெல்லாம் எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையும் விட இதுதான் அனுபவ பூர்வமான தத்துவம். ஆண்டவன் நமக்கு நல்ல வாய்ப்புகளைத் தந்திருக்கிறார். அதையெல்லாம் பயன்படுத்தியிருக்கக்கூடிய மூளையும் சிந்தனையும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அடுப்பை நீங்கள் தான் மூட்ட வேண்டும். உங்களுக்கு உகந்ததை நீங்கள் தான் சமைத்து, ருசித்து, அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் அதைச் செய்ய மாட்டான் என்றாராம் அந்த சுவாமி. நம்முடைய வாழ்க்கையிலே நல்ல பலன்களைப் பெற நாங்கள் தான் முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத் தான் ஆண்டவன் கொடுப்பார். அதை விளக்குவதற்காக தான் அந்த சுவாமி அப்படி செய்து காட்டினார் என்று விளக்கம் கொடுத்தார் ஒரு பெரியவர். (சுவாமி சின்மயானந்தர் )

அதற்குப் பின்அந்த மூன்று தம்பதிகளும் தெளிவடைந்து விட்டார்களாம். நாம் தெளிவடைவது எப்போது? இந்தக் கதையை என்னுடைய நண்பன் ஒருவரிடம் சொன்னேன். அவன் மிகவும் சந்தோஷப்பட்டான். நீங்கள் சொல்வது சரி தான் சார். ஆனாலும் நான் அதைவிட ஒருபடி மேலே சார். எனக்கெல்லாம் அரிசி, பருப்பு இருக்கிற அறை எதுவென்று கையை காட்டிவிட்டால் போதும். கிண்ணத்திலே இருந்து சாவியை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பது அவசியம் கூட இல்லை என்றான். அதற்குப் பிறகு எப்படி [illegible]த் திறப்பாய் என்று கேட்டேன். பூட்டை உடைத்து திறந்திடுவேன். அது தான் எனக்குப் பழக்கம் என்றான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு நிகழ்வும் 'அறுவடை' இதழ் வெளியீடும்



(தருமபுரம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) இ.நளாஜினி, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கந்தையா பகீரதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மாகாண மட்டத்தில் 17 விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களும் மாவட்ட மட்டத்தில் 15 பண்ணையாளர்களும் 61 விவசாயிகளுக்குமான விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாகாண மட்ட வெற்றியாளர்களின் அனுபவப் பகிர்வுகளும் நடைபெற்றன.

மேலும் இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் காலாண்டு இதழான "அறுவடை" இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.(6-8-316)

# வடக்கு காணி அலுவலகம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

## ஜனவரி 3 ஆம் திகதி முதல் சேவைகள் ஆரம்பம்



(தருமபுரம்)

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்குரிய அலுவலகம் கிளிநொச்சியில் சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), இ.நளாஜினி, மாகாண காணி ஆணையாளர் அ.சோதிநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி முதல் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்து மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.75 மில்லியன் ரூபா செலவில் குறித்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் தற்காலிக இடத்தில் இயங்கி வந்த மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் தற்போது கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

# தேன் எனக் கூறி சீனிப்பாணி விற்பனை

- மூவர் கைது
- 200 போத்தல் சீனிப்பாணி மீட்பு



(குருமன்காடு)

வவுனியாவில் தேன் எனக் கூறி சீனிப்பாணியை தயாரித்து விற்பனை செய்து வந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 200 போத்தல் சீனிப் பாணியும் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா பொதுச் சுகாதார பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுகாதார பரிசோதகர் குழுவினரும் நெளுக்குளம் பொலிஸாரும் இணைந்து ஊர்மிளாக் கோட்டம் பகுதியிலுள்ள வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த இடங்களில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 200 போத்தல் சீனிப்பாணியும் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூன்று பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சீனிப்பாணியை தயாரித்து அதற்குள் சிறிதளவு தேனை மாத்திரம் கலந்து ஏ9 வீதியின் முறிகண்டிப் பகுதியிலும் நெடுங்கேணி பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் இங்கிருந்து அநுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளுக்கும் அவை கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கின்றது. எனவே பொதுமக்கள் தேனை கொள்வனவு செய்யும் போது சரியான முறையில் உறுதிப்படுத்தி அவற்றை கொள்வனவு செய்யுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (6-8-250)

# கனடாவில் இருந்து வந்த பொதியில் போதைப்பொருட்கள் மீட்பு

## வவு.சேர்ந்த ஒருவர் கைது

(குருமன்காடு)

கனடாவில் இருந்து இலங்கை வந்த பார்சலில் போதைப் பொருள் டின்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி கப்பலில் வந்த கொள்கலன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க ஊடக செயலாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

இந்தப் போதைப்பொருள் அடங்கிய பொதிகள் வவுனியா மற்றும் களுத்துறை முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மேலதிக விசாரணை மற்றும் தேவை யான சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (6-8-250)

# விவசாயிகளுக்கு உரம் பகிர்ந்தளிக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

ரஸ்யா அரசாங்கத்தினால் இலங்கை விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்காக கையளிக்கப்பட்ட 55000 மெற்றிக்தொன் MOP உரம் பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை கமநல சேவை நிலையங்களுக்கு கொண்டு வரப்பட்டதுடன் குறித்த உரத்தினை விரைவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார். (6-8-316)

# மயக்க மருந்து கொடுத்து நகைகள், வாகனங்கள் திருட்டு

- இருவர் கைது
- தங்க நகை, முச்சக்கரவண்டி மீட்பு

(குருமன்காடு)

வடமாகாணத்தில் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து சிவப்பு நிற முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று முச்சக்கர வண்டி சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே தள்ளி விழுத்தி விட்டு குறித்த முச்சக்கர வண்டியை கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜேசேகரவின் ஆலோசனையில், குழுவினர் முன்னெடுத்த விசாரணையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த முச்சக்கர வண்டிக்கு நீல நிற வர்ணப்பூச்சு பூசி வாகன இலக்கத்தகடு மாற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தெரிய வந்ததையடுத்து குறித்த முச்சக்கர வண்டி மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வடக்கில் இடம்பெற்ற மேலும் சில குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டமை தெரிய வந்துள்ளது. வவுனியா, உளுக்குளம் பகுதியில் வைத்து முச்சக்கர வண்டி சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டு அவர் அணிந்திருந்த ஒன்றேகால் பவுண் மோதிரத்தை திருடச் சென்றமை, மன்னார், அடம்பன் பகுதியில் ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து ஒன்றேகால் பவுண் மோதிரத்தை திருடச் சென்றமை மற்றும் மல்லாவி பகுதியில் டிப்பர் சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து 2 பவுண் சங்கிலியை திருடிச் சென்றமை என்பனவும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, திருடப்பட்ட நகைகள் விற்கப்பட்ட இடத்தில் இருந்து உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறித்த இரு நபர்களிடம் இருந்து முச்சக்கர வண்டி மற்றும் 4 1/2பவுண் நகை என்பன மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 45 வயது நபரும், மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 47 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.(6-8-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 656





மேடு, பள்ளம், காடு, செடி என்று பாராமல் அதிவேகமாய்ச் சென்றது.

### 34 ஆம் அத்தியாயம் தீவர்த்தி அணைந்தது!

அமாவாசை முன்னிரவு, நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. வடதிசையில் தோன்றி மேலே வந்து கரிய மேகங்கள் இப்போது வான்வெளி முழுதும் பரவி மறைத்து விட்டன. ஆகாயத்தில் ஒரு நட்சத்திரம் கூடக் கண் சிமிட்டவில்லை. மரங்களின் மீதும் புதர்களின் மீதும் பறந்த மின்மினிப் பூச்சிகள் சிறிது வெளிச்சம் அளித்தன. அதன் உதவிகொண்டு வந்தியத்தேவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம், போவதனால் பயன் ஏதேனும் ஏற்படுமா என்பதும் ஒன்றும் தெளிவாகவில்லை. குந்தவைப் பிராட்டியின் அருமைத் தோழிக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவளைக் காப்பாற்ற முயலுவது தன் கடமை. அதன்பின் கடவுள் இருக்கிறார்.

ஒரு நாழிகை நேரம் குதிரை ஓடிய பிறகும் பல்லக்கைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வெறும் பைத்தியக்கார வேலையில் இறங்கி விட்டோமோ என்ற யோசனை வந்தியத்தேவன் மனதில் உதித்தது, குதிரையை நிறுத்தினான். அச்சமயம் சற்றுத் தூரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்தான்! குதிரைக் காலடிச் சத்தம் போலிருந்தது. ஆம், குதிரைதான்! ஒரு குதிரையா, பல குதிரைகளா என்று தெரியவில்லை. பல்லக்கைக் காவல் புரிந்து கொண்டு போகும் குதிரை வீரர்களாயிருக்கலாம். இனி ஜாக்கிரதையாகப் போக வேண்டும். திடீரென்று பெருங் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. அதனால் வானதி தேவிக்கும் பயன் இல்லை தன் காரியமும் கெட்டுப் போகும்.

மெல்ல மெல்ல நின்று நின்று, குதிரையை விட்டுக் கொண்டு போனான். முன்னால் போவது ஒரே குதிரை தான் என்று ஒருவாறு நிச்சயித்துக் கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் குதிரை ஒரு மேட்டுப் பாங்கான கரையின் மீது ஏறுவது போலத் தோன்றியது. தான் பின் தொடர்வது தெரியாமல் மறைந்து நிற்க விரும்பினான் சுற்றும் முற்றும் கூர்ந்து பார்த்தான். பாழடைந்த மண்டபம் ஒன்று இடிந்த சுவர்களுடன் பக்கத்தில் காணப்பட்டது. அதன் அருகே சென்று மொட்டைச் சுவர் ஒன்றின் மறைவில் குதிரையை நிறுத்திக் கொண்டான். முன்னால் சென்று மேட்டில் ஏறிய குதிரையைக் கண்கள் வலிக்கும் படியாக இருட்டில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யார் அங்கே?" என்ற குரல் வந்தியத்தேவனைத் திடுக்கிடச் செய்தது.

அது அவனுக்குப் பழக்கப்பட்ட மனிதரின் குரலாகத் தோன்றியது.

"மகாராஜா! அடிமை, நான் தான்!" என்ற மறுகுரலும் கேட்டது.

ஒரு நிமிட நேரத்துக் கெல்லாம் குரல்கள் கேட்ட இடத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தோன்றியது. மரத்தின் மறைவிலிருந்து கையில் தீவர்த்தியுடன் ஒருவன் வெளியே வந்தான். அதன் வெளிச்சத்தில் குதிரை தெரிந்தது. குதிரையின் மேல் ஓர் ஆள் வீற்றிருப்பது தெரிந்தது. குதிரை மேலிருந்தவர் மதுராந்தகர் தான் என்பது உறுதியாயிற்று.


தரையில் நின்றவன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்த போது இளவரசர் ஏறியிருந்த குதிரை மிரண்டது. முன்னங்கால்களை அது மேலே தூக்கி ஒரு தடவை சுழன்றது. பின்னர் சடால் என்று பாய்ந்து ஓடத் தொடங்கியது.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நீர்ப்பாம்பும் நாகபாம்பும்





ஓர் ஏரியில் நீர்ப் பாம்பு ஒன்று வசித்து வந்தது. அது சில சமயங்களில் ஏரியை அடுத்தாற் போலிருந்த புற்தரைக்கும் வரும். சிறிது நேரம் புற்களின் மீது ஊர்ந்து சென்று காற்று குடிக்கும். பிறகு ஏரிக்குத் திரும்பி விடும்.

ஒரு நாள் புல் வெளியில் அது ஊர்ந்து செல்லும் போது, எதிரில் ஒரு நாகபாம்பைக் கண்டது. ஒன்றை யொன்று சந்தித்தவுடன் இரண்டும் அன்பாகப் பேசிக் கொண்டன. நலம் விசாரித்துக் கொண்டன. அப்போது தூரத்தில் இருந்த மூங்கில்களின் ஊடாக காற்று மோதியதால்இனிய ஓசையெழுந்தது. அந்த இனிய ஓசையைக் கேட்டவுடன், நாகபாம்புக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இன்பத்தின் எக்களிப்பில் அது படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தது. அதன் அழகிய ஆட்டத்தைக் கண்கொட்டாது பார்த்து நீர்ப் பாம்பும் மகிழ்ந்தது.

அன்று முதல் அவையிரண்டும் நட்பினராகி விட்டன. அடிக்கடி ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. பேசிக்கொண்டே ஒன்றாக ஊர்ந்து பல இடங்களுக்குச் சென்றன.

ஒரு நாள் அவையிரண்டும் ஊர்ந்து சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஓர் ஒற்றையடிப்பாதை இருந்தது. சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று நீர்ப்பாம்பு அந்தப் பாதையின் மீதே படுத்துக் கொண்டது. நாகபாம்போ புற்களின் உள்ளே சென்று மறைவாகப் படுத்துக் கொண்டது.

"ஏன் போய் ஒழிந்து கொள்கிறாய் ?" என்று நீர்ப்பாம்பு கேட்டது.

"இந்த ஒற்றையடிப் பாதையில் மனிதர்கள் வருவார்கள். கண்டால் அடித்துக் கொன்று விடுவார்கள்" என்றது நாகபாம்பு.

"நான் எத்தனையோ முறை அவர்கள் போகும் பாதைகளில் படுத்திருக்கிறேன். என்னை யாரும் அடிக்கவில்லையே!" என்று வியப்புடன் கூறியது நீர்ப் பாம்பு.

"உன்னிடம் நஞ்சில்லை. என்னிடம் நஞ்சு இருக்கிறது. நான் கடித்தால் அவர்கள் இறந்து விடுவார்கள். அதனால் என்னை அவர்கள் பகையாகக் கருதுகிறார்கள். கண்ட இடத்தில் கொன்று விடுவார்கள்" என்று கூறி, மறைவான இடத்திலேயே படுத்துக் கொண்டது, நாகபாம்பு.

கருத்துரை :- நல்ல மனம் படைத்தவர்கள் அச்சமின்றி வாழ்வார்கள். நெஞ்சில் வஞ்சங் கொண்டவர்கள் தான் ஒழிந்து மறைந்து வாழ் வார்கள் நஞ்சுள்ள நாக பாம்பு போல் அவர்கள் மனித இனத்தின் பகையாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகட்டுத்தன்மை இல்லாமல் நமக்குள் வளர்க்கும் பண்புகளே விலை மதிப்பற்றது. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கலாநிதிப் பட்டம் பெற்ற பெரு வாழ்வு

கலாநிதிப் பட்டம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக இந்த நாட்டின் சபாநாயகர் அசோக சபுமன் ரன்வல தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அசோக ரன்வலவின் கலாநிதிப் பட்டம், குறித்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட வில்லை என்ற விடயத்தை எதிர்க்கட்சிகள் முன்வைத்தபோது பாராளுமன்றம் அமளி துமளிப் பட்டாயிற்று.

எனினும் பெருந்தன்மையோடு சபாநாயகர் பதவியை அசோக ரன்வல இராஜினாமாச் செய்துவுள்ளார்.

அவரின் இராஜினாமாவோடு அந்தப் பிரச்சினை முற்றுப் பெற்றதாயினும் கலாநிதி என்ற சிக்கல் முற்றுப் பெற்றதாக இல்லை.

ஆம், பொதுவில் கலாநிதிப் பட்டத்தை பல்கலைக்கழகத்தில் ஆய்வு மூலமாக நிறைவேற்ற முடியும்.

தவிர, குறித்த துறையில் உன்னதப் பணியாற்றியவர்களுக்கு அல்லது அந்தத் துறைக்கு தமது ஆற்றல் மிகு பங்களிப்பை வழங்கியவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்குகின்ற நடைமுறையும் உண்டு.

எனினும் அண்மைக்காலமாக சில அமைப்புகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இயங்குவது போலக் காட்டிக் கொண்டு, பெருந்தொகைப் பணத்தைப் பெற்று கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்குகின்றன.

இங்குதான் கலாநிதி என்ற உயரிய தகைமை சர்வசாதாரணமாக சந்தையில் கிடைக்கின்ற பொருள் போல வழங்கப்படுகிறது.

அதிலும் கலாநிதிப் பட்டம் வழங்குகின்ற பட்டமளிப்பு விழாவானது ஐந்து நட்சத்திர விடுதிகளில் இடம்பெறுவதுடன் குறித்த பட்டமளிப்பு விழாவில் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், பல்கலைக்கழக கல்வியாளர்கள் பங்கேற்கின்றனர்.

இதன் காரணமாக பிரஸ்தாபக் கலாநிதிப் பட்டம் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப் பட்டது போன்ற மாயை ஏற்படுகின்றது.

இத்தகைய நிலைமை ஏற்படும்போது அதுபற்றி அரசாங்கமும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் கருசனை கொள்ளாதது ஏன்? என்ற கேள்வி எழுவதில் நியாயமும் உண்டு.

ஆம், எழுந்தமானமாக சில உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பெயர்களைப் பயன்படுத்தி கலாநிதிப் பட்டங்களை விற்பனை செய்யும்போது, அதனை அரசாங்கம் தடுத்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து பல்கலைக்கழகத்துக்கு உரித்தான உயரிய பட்டத் தகைமையாகக் கருதப்படும் கலாநிதிப் பட்டத்தை எவரும் வழங்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டதன் காரணமாக இந்த நாட்டின் சபாநாயகர் மிக சொற்ப காலத்தில் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

ஆக, இனிமேலாவது நிறுவனங்கள் கலாநிதிப் பட்டம் வழங்குவதை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# வடக்கின் உண்மையான வசந்தம் 2025ஆம் ஆண்டு முதல் வீசும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

உண்மையான வடக்கின் வசந்தம் 2025ஆம் ஆண்டு முதலே வீசும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது ,

கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிதிகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கூட்டத்தில் முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் அது தொடர்பான முன்மொழிவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதில் முக்கியமாக வெள்ள அனர்த்தம் தொடர்பில் பேசப்பட்டது.

வெள்ளங்களுக்குத் தீர்வு காணும்முகமாக முன்மொழிவு வைக்கப்பட்டு, அதற்காக சுமார் 250 மில்லியன் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

அந்த நிதி கிடைக்கப் பெற்றால் வேலைகள் முன்னெடுக்கப்படும்.

வடமாகாண ஆளுநரால் பல்வேறு திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் அமைச்சரவையில் முடிவெடுத்து அனுமதிகள் கிடைக்கப்பெற்றதும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கிராமங்களை நோக்கியே திட்டங்கள் முன் வைக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்படும்.

கிராம மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதே எமது நோக்காகும். விசேடமாக கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தவுள்ளோம்.

கடந்த கால குறைகளை நிவர்த்தி செய்து ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்புவோம் என மேலும் தெரிவித்தார். (ம-7,33)

# ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் 'கலாநிதி'

## தவறிழைத்ததாகப் பாராளுமன்றம் அறிவிப்பு

பாராளுமன்ற இணையத்தளத்தில் அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி என்று குறிப்பிடப்பட்டமை, குறித்த தகவல்களை உள்ளீடு செய்யும்போது ஏற்பட்ட தவறினால் ஏற்பட்டதாக இலங்கைப் பாராளுமன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கைப் பாராளுமன்றம் இதனைத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் பாராளுமன்றத்திற்கு வழங்கிய தகவல் பத்திரத்தில் கலாநிதி என்ற பட்டம் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அதன் படி, மேற்படி தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு இலங்கைப் பாராளுமன்றம் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தது.

மேலும், பாராளுமன்ற இணையதளத்தில் உள்ள அனைத்து எம்.பி.க்களின் தகவல்களையும் மீண்டும் சரிபார்த்து புதுப்பிக்கும் பணி தற்போது நடந்து வருவதாக இலங்கைப் பாராளுமன்றம் அறிவித்துள்ளது. (ம-7)

# இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய விநாயகர் சஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தென். கோவை அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தான விநாயகர் சஷ்டி விரத காலட்சாக்ஷணைப் பெருவிழாவானது எதிர்வரும் திங்கட்கிழமை (16.12.2024) முதல் 04.01.2025 சனிக்கிழமை வரை விமர்சையாக இடம் பெற்று சனிக்கிழமையன்று கஜமுக அசுரசங்காரமும் லட்சார்ச்சனை பூர்த்தி வைபமும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நான்கு மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம் பெற்று பஞ்சமுக விநாயகர் வீதிவலம் வருதல், பிள்ளையார் கதை படிப்பு என்பனவற்றுடன் விநாயகர் சஷ்டி உற்சவமானது இனிதே நிறைவடையவுள்ளது.

இவ் விநாயகர் விரத காலத்தில் விசேட தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் மாலை 3.30 மணிக்கு அபிஷேகமும் நான்கு மணிக்கு மூலஸ்தான பூஜையும் அதனைத் தொடர்ந்து நான்கு முப்பது மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூஜையுடன் லட்சார்ச்சனை பெருவிழாவானது இடம்பெற்று பிள்ளையார் கதை படிப்புடன் நிறைவு பெறும். (ம-7)

# மீன்பிடிப் படகு கவிழ்ந்ததில் மட்டக்களப்பில் ஒருவர் பலி

மட்டக்களப்பு முகத்துவாரம் கடற்பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று காலையில் இடம்பெற்றதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திராய்மடு முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளார். (ம-7)

# இந்திய உயர் ஸ்தானிகர் பிரதமருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேற்று பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் மூலோபாய கூட்டாண்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

அத்துடன் தற்போது பல்வேறு அபிவிருத்தி நிலைகளில் உள்ள பல இருதரப்புத் திட்டங்களின் முன் [illegible] குறித்தும் [illegible] கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தூதுக்குழுவில் உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி பி.டபிள்யூ.ஜி.சி.சாகரிகா போகஹவத்த, மற்றும் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க்பிரிவு பணிப்பாளர் நாயகம் திருநிலுக [illegible] ஆகியோர் [illegible]ண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம்

## இன்று முதல் ஆரம்பம்

2024 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின்படி சிவனொளிபாதமலை வளாகத்தில் தற்காலிக தங்குமிடங்களை அமைத்தல், பராமரித்தல், கட்டடங்கள் கட்டுதல், யாசகம் பெறுதல், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாத்திரைக் காலம் அடுத்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி வரை அமுலில் இருக்குமென வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்கு பொருத்தமற்ற பிளாஸ்ரிக் பொருட்கள்

## அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களுக்கான தண்ணீர் போத்தல்கள் மற்றும் உணவுப் பெட்டிகளைக் கொள்வனவு செய்யும் போது பெற்றோர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**



பாடசாலைத்தவணை ஆரம்பத்தை இலக்காகக் கொண்டு தரமற்ற தண்ணீர் போத்தல்கள் மற்றும் உணவுப் பெட்டிகள் விற்பனை செய்யப்படுவதைக் கண்டறிவதற்காக எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தையில் விற்பனை செய்யப்படும் 75 சதவீதமான பிளாஸ்ரிக் உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் என்பன பாவனைக்குப் பொருத்தமற்றவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பிளாஸ்ரிக் பொருட்களினால் சிறுவர்களின் ஓமோன் ரீதியான செயற்பாடு சீர்குலைந்து பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த இரசாயனங்கள் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்டவை எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணையில் கையெழுத்திட்ட ஐக்கிய மக்கள் சக்தி



(கொழும்பு)

சபாநாயகர் அசோக ரன்வலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கையெழுத்திட்டது.

கலாநிதி பட்டம் பெற்றுள்ளதாக பொய்யாகக் கூறி பொதுமக்களையும் அரசாங்கத்தையும் தவறாக வழிநடத்தியதாகக் குற்றம் சுமத்தியே சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும் பாராளுமன்றம், அரசியலமைப்பு மற்றும் அவரது தலைமையின் கீழ் உள்ள பிறமுக்கிய அரசு நிறுவனங்களின் மீதான பொது நம்பிக்கையை அவர் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய பெரேரா, சத்துர கலப்பத்தி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (நி-8)

# கனிய மணல் அகழ்வு முயற்சி மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் எனும் நிறுவனம் இல்மனைட் அகழ்விற்கு எடுத்த முயற்சி, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியில்லாமல், இப்பகுதி மக்களின் அனுமதி இல்லாமல் எவ்வாறு இங்கு கனியமணல் அகழ்வதற்கு வருகைதரமுடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன் போது கேள்வி எழுப்பியதுடன் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பினைத் தொடர்ந்து கனிய மணல் அகழ்விற்குரிய முதற்கட்ட செயற்பாடுகளுக்கு வருகைதந்த மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்க ராசா பிரதாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இளையதம்பி தணிகாசலம், நாயாறு கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி பொது மக்கள் என பலரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)


# எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் யாழில் மார்கழி இசை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த மார்கழி இசை விழா எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் மாலை 5 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உள்ளூர் மற்றும் இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. குறிப்பாக பிரபல இந்திய புல்லாங்குழல் வித்துவான் ஸ்ரீதர் தலைமையிலான 'புல்லாங்குழல் இசை' நடைபெறவுள்ளது. (6-8-33)

# நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்ள தயார்



(கொழும்பு)

சபாநாயகர் அசோக ரன்வலவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தால் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தயார் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எவ்வாறான பதில் கிடைக்கும் என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சபாநாயகரின் கூற்றினை கருத்திற் கொண்டு செயற்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கு இது பொருத்தமான காலம் கிடையாது என பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.இதன்படி, சபாநாயகர் அசோக ரன்வல தனது கலாநிதி பட்டம் தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக கூறப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க்...

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத் திருநாளான நேற்று மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று, வள்ளி, தேவசேனா சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப்பெருமான் வெளிவீதியுலா வந்தமை சிறப்பாக நடைபெற்றது. (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2024.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 5684
Y 2 2 3 7 7 9
அத சம்பத
Y 3 7 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 259
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1714
T 08 23 68 80 T
Double Chance 08728

மெகா பவர்
திகதி 2024.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 2032
N 23 15 30 45 66
123160
225172
280010
மோட்டார் சைக்கிள் வெற்றி இலக்கங்கள்
தங்கக் கா வெற்றி இலக்கங்கள்
1287022
1476770 1428108 0622341 1097702
0362256 1861127 0537273 0265144 1417161

லக்கி 7 VIP
திகதி 2024.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 510
S 7 8 6 8 8 3 S

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3926
சீட்டிழுப்பு திகதி 13.12.2024
C 12 18 37 64
C 174309
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.13
சீட்டிழுப்பு இலக்கம் 993
கன்னி 10 16 35 61 கன்னி
152389 20

## வட்டுவாகல்...

தார்.

வட்டுவாகல் பாலம் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகிறது. சுனாமி அனர்த்தத்தின்போதும் இறுதி யுத்தத்தின்போதும், பாலம் சேதமடைந்த நிலையில், அதனை முழுமையாக புனரமைப்புச் செய்யப்படாமல், தற்காலிகமாகத் திருத்தப்பட்டிருந்தது.

மக்கள் பயன்பாட்டில் உள்ள ஆபத்தான பாலமாக வட்டுவாகல் பாலம் காணப்படுவதுடன், மழை காலங்களில் பாலத்திற்கு மேலாக வெள்ளம் பாய்ந்தோடுவதால், பாலத்தின் ஊடான போக்குவரத்து தடை செய்யப்பட்டு இருக்கும்.

அதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதனால் குறித்த பாலத்தினைப் புதிதாகக் கட்டித் தருமாறு பல ஆண்டு காலமாக முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே கடற்றொழில் அமைச்சர், வட்டுவாகல் பாலத்தைப் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## கடந்த ஒரு...

சாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், உயிரிழந்த ஒருவருக்கு Leptospirosis (எலிக் காய்ச்சல்) என பரிசோதனை முடிவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மூவருக்கு Leptospirosis தாக்கம், ஒருவருக்கு வைரஸ் தொற்று, மற்றொருவருக்கு இருதயக் கோளாறுடன் வைரஸ் தொற்று என்று நம்பப்படுகிறது.

ஆய்வுகூடப் பரிசோதனையின் இறுதி முடிவுகள் சில தினங்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 5 பேர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருமலுடன் காய்ச்சல் உள்ளவர்கள் தாமதமின்றி வைத்தியசாலையை அணுகி சிகிச்சை பெற வேண்டும். உடனடிச் சிகிச்சை பெறும்போது நோயிலிருந்து விரைவாகக் குணமடையலாம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்படி சிகிச்சைக்கான சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அடிப்படைச் சுகாதார வழிமுறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனினும் பதற்றம் கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## யாழில் பரவி...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவி வரும் எலிக்காய்ச்சல் நோயினால் இதுவரை 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரை இக்காய்ச்சலினால் யாழ். மாவட்டத்தில் 06 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் இக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். இந்நோயாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட மாதிரிகளில் 03 பேருக்கு எலிக் காய்ச்சல் நோய் இருப்பதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7,33)

## கிளிநொச்சியில்...

லீற்றர் கோடாவும் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்கள் அனைத்தும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,316)

## யாழ்.ஒருங்...

யின்மை ஏற்பட்டுள்ளது.

அதாவது, நகர அபிவிருத்தி தொடர்பான விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா வருகை தந்த துறை சார்ந்த பெண் உயர் அதிகாரி ஒருவரை "அன்ரி" உங்கள் முகம் வியர்க்கிறது உங்களுக்குத் திட்டமிடல் என்றால் என்ன எனத் தெரியுமா? எனக் கேட்டுள்ளார்.

அதுமட்டுமல்லாது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை "தங்கம்" "முத்து" என அடிக்கடி கூறியதுடன் அவரின் கல்வித் தகைமை தொடர்பிலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாகாண அதிகாரி ஒருவரை படையப்பா படம் பார்த்தீர்களா பத்து மில்லியனை 10 நாளில் எப்படிச் செலவளிப்பீர்கள் தனக்குக் கூறுமாறு அடிக்கடி குறுக்கீடு செய்து கேள்விகளைத் தொடுத்துள்ளார்.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் திட்டங்களை வகுக்கும்போது உங்கள் கல்வி அறிவு போதாது என அதிகாரிகளை விமர்சித்ததுடன் அவ்வாறு தேவைப்பட்டால் என்னிடம் வாருங்கள் கற்றுத் தருகிறேன் எனச் சாடியுள்ளார்.

இதனையடுத்து மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலையீட்டின் பின்னர் அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ம-7,33)

## பயங்கரவாத...

சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையின் மீது நம்பிக்கையை கட்டியெழுப்புவது என்பது அரசாங்கம் என்ற அடிப்படையில் எங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மீது மீண்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்றார். (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி மில்லியன் ... 13.12.2024 வெற்றி வாரம் 392
Z 7 3 8 5 2 4
80115
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,186,666.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2658
சீட்டிழுப்பு திகதி 2024.12.13 தினம் வெள்ளிக்கிழமை
08 31 59 71 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,723,328.00
DLB

சனிதா
திகதி 13.12.2024 வெற்றி வாரம் 4819
10 30 45 64 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,275,435.60
05418
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4370
சீட்டிழுப்பு திகதி 13.12.2024 தினம் வெள்ளிக்கிழமை
09 10 40 51 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,557,211.20
133731
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 29 04 30 36 49
சுப்பர் இலக்கம்
1834
13.12.2024 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,139,517.80
DLB

சசிரி
வெற்றி வாரம் 577
சீட்டிழுப்பு திகதி 13.12.2024 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 31 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2484
சீட்டிழுப்பு திகதி 2024.12.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,000,123.20
அத கோடிபதி ADA KOTIPATHI
24 32 38 76 B
559987
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

**1 பரப்பின் விலை :**

**24 இலட்சம் ரூபாய் ( 24 00 000/= )**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.
- UDA சான்றிதழ் பிரதேச சபை சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும்.

(2757)

**076 298 1105, 076 017 1105**

## காணி தேவை

யாழ். மாவட்டத்தில் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட கோப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 10 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை.
காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

குரு

தொடர்பு : **077 468 3354**

(2757)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகள், அலுவலகங்களுக்கே வந்து திருத்தித் தருகிறோம். அழையுங்கள்

**077 908 6737**

**GUNA BEST PC**

379, K.K.S Road, Jaffna.
Computer Laptop - CCTV - Printer

(2760)

## விசேட பொதுக் கூட்டம்

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் விசேட பொதுக் கூட்டம் 29.12.2024 அன்று காலை 10 மணிக்கு ஆலய கலா மண்டபத்தில் நடைபெறும்.

நன்றி

ஆலய பரிபாலன சபை

(2756)

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் மிகவும் அமைதியான சூழலில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :

**077 7880 330**

(629)

## விவசாயிகளுக்கு



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய, **இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.**

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர், பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

V2 "நாங்கள் உங்களோடு"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(2754)

Hotline : 071 535 7799/ 071 973 9917

# யாழ் நகரில் !

உயர்தரமான உணவு வகைகளை சுத்தமாகவும், சுவையாகவும் உங்களுக்கு வழங்குகிறோம்.

முற்பகல் 11:00 மணி தொடக்கம்
இரவு 10:00 மணி வரை.

சிங்கை
SINGAI
RESTAURANT

214, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 077-214-1214

(2755)

## V2 VISA SERVICES

**கனடா** Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1795)

## சாரதி தேவை

யாழ்.சாவகச்சேரிப் பகுதியைத் தளமாகக் கொண்டு இயங்கும் கட்டட நிறுவனத்துக்கு பார ஊர்தி வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடைய சாரதி தேவை. (சாவகச்சேரிப் பகுதியை அண்மித்தவரும், பொருட்கள் ஏற்றி இறக்குபவரும் விரும்பத்தக்கது)

(2741)

**077 9587 176**

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரிலுள்ள உல்லாசப் பயணிகளின் விடுதியொன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் தேவை.

- சுத்திகரிப்பாளர்
- **Room boy**
- காவலாளி
- சமையலாளர்

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

(C-1794)

**077 6016 310, 077 2431 310**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 279/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 388/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 650/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No 1 | - 780/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2790/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 280/= | |
| 500g சமபோஷா | - 379/= | ~~420/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240/=~~ |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 980/= | ~~1050/=~~ |

1Kg சன்லைட் பவுடர் 310/= ~~380/=~~



400g Anchor 987/= ~~1050/=~~ Max 01



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(630)

Happy Supermarket
0777 8080 30

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

(2759)

**077 814 7389, 077 986 5457**

# சிறிராம் ஜுவல்லர்ஸ்







புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை



22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-1772)

077 [illegible] 1729, 077 773 0567, 021 222 8334

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.